கோணங்/ல்கள்

குழந்தைக்கு வயது மூன்று இருக்கும். பைஜாமாவும் ஷர்டும் போட்டுக்கொண்டிருந்தான். கழுத்தில் சட்டைக்கு வெளியே தங்கச் சங்கிலி. அந்த மைனரைத் தாயார் பூரிப்புடன் பார்த்துக்கொண்டிருந்தாள். தந்தையைப் போல எவ்வளவு மிடுக்குடன் நடக்கிறான்! சுத்தமாக இருப்பதில் பூனையைப்போல இவனுக்கு எவ்வளவு அக்கறை! இன்னொரு பிள்ளையாய், இந்த ரோட் பக்கம் நின்றிருந்தால்? அதோ நிற்கவில்லையா அம்மணமாக ஐந்தாறு? உவா! என்ன அசிங்கம்! மூக்கு ஒழுகுகிறது. ஒன்றுக்கு கண்ணில் புளிச்சை. ஒன்றுக்குக் கழுத்தும் வயிறும் விஞ்ஞானசாலை பிளாஸ்கு மாதிரி இருக்கிறது. பயங்கரம்! இவன் புத்திசாலித்தனத்திற்குப் போக வேண்டியதுதான்! பூரிப்புடன் தெருவில் நின்று அகம் மகிழ்ந்து கொண்டிருந்த தாயார் கொஞ்சம் உள்ளே போய்த் திரும்பினாள்.

அவள் கண்ட காட்சி! அந்த மைனர் தெருவில் சம்மணமாக உட்கார்ந்திருந்தான். அம்மணமாக இருந்த குழந்தைகள் அத்தனையும் அவனைச் சுற்றி உட்கார்ந்து கொண்டிருந்தனர். இரண்டொன்று சட்டையைத் தடவிப் பார்த்துக்கொண்டிருந்தன. ஒன்று செயினைத் தொட்டுப் பார்த்துக்கொண்டிருந்தது. கூட்டத்து நடுவில் புழுதி கோபுரமாகக் குவிக்கப்பட்டிருந்தது. பிள்ளையின் கை

எல்லாம் புழுதி ! சூறைவிழுந்த வயல்மாதிரி தலையில் கூட திட்டுத் திட்டாகத் தெரிந்தது புழுதி !

தாயாருக்குத் தலையைப் பிளக்கும் ஆத்திரம் ! ஆனால் அது கேள்வியாகப் பொத்துக்கொண்டு கிளம்பிற்று.

'இதெல்லாம் என்னடா ?'

'கோயில், அம்மா.'

தாயாருக்குக் கோயில் கண்ணில் படவில்லை. வண்ணான் உடுப்பு அழுக்கானதுதான் கண்ணில் பட்டது சுற்றிலும் உட்கார்ந்திருந்த அம்மணங்களும், புளிச்சையும், மூக் கொழுக்கும் தான் கண்ணில் பட்டன.

பிள்ளையை ஒரு அறை வைத்து வீட்டுக்குள்ளே இழுத்துக் கொண்டு போய் உடுப்பைக் கழற்றினாள். 'வேலா ! இதைக் கொண்டு போய் நெருப்பில் போட்டு விட்டு வா' என்று கூவினாள்...

வேலனுக்கு அம்மாள் சமாசாரம் தெரியும். சொன்னதை உடனே செய்வதுபோல் எடுத்துக்கொண்டு போய் மறைவாக வைத்துவிட்டான்.

* * *

அதே ரோடு. கார்கள் பறந்து கொண்டிருந்தன. காதைத் துளைக்கும் ஹாரன் சத்தத்தில் திகைத்துத் திகைத்து மனித வெள்ளம் பாய்ந்துகொண்டிருந்தது.

ஒருத்தி குழந்தையை ரோடின் குறுக்கே தூக்கிக் கொண்டு வந்துகொண்டிருந்தாள். காலெல்லாம் புழுதி. கப்பி ரோடு புழுதியாக இருந்தாலாவது காலோடு ஒத்துப் போயிருக்கும். ஆனால், கோல மாவு காலில் கொட்டியது போல வெளுப்பாக இருந்தது. ட்வெயின் கயிறு நடந்து வருவதுபோன்ற தளர்ச்சி. கட்டியிருந்த புடவை மழை யடித்த வானம்போல வெளிறிக் கிடந்தது. முப்பது

மையாவது நடந்திருக்க வேண்டும்! ஆனால் அதற்கு உடலில் சக்தியில்லை என்று முழங்கை முடிச்சுகளும் கண் கோலிகளும் சொல்லிக்கொண்டிருந்தன.

சக்தியில்லாவிட்டால் என்ன? ஆழ்ந்த பரிவொன்று விழிகளில் தேங்கி, குழந்தையின்மீது ஒரு சமயம் நிலைகுத்தி இருந்தது. மறுசமயம் எதையோ பொறுக்கி எடுத்து குழந்தைக்கு அளிக்கத் துடிப்பதுபோல ஒரு பார்வை வீடுகள் மீதும், ஒரு பார்வை குழந்தைமீதுமாக மாறிக் கொண்டிருந்தது. பாழும் வீடுகள்! ஒன்றிலாவது இரும்புக் கிராதி இல்லாமலில்லை. வேதனையால் அவள் முகம் ஒரு தரம் சுளித்தது. அடுத்த நிமிஷத்தில் அவள் ஒரு காரியம் செய்துவிட்டாள்!

வேகமாக ரஸ்தாவைவிட்டு ஒதுங்கி ஒரு வீட்டிேரம் உட்கார்ந்து குழந்தைக்குப் பால் கொடுக்க ஆரம்பித்து விட்டாள். பிள்ளைக்குப் பால் கொடுக்கும் லயிப்பில் அவள் பார்வை குழந்தையின்மீதே செருகியிருந்தது. மாராப்பு எப்படி இருந்ததென்றுகூட அவள் கவனிக்கவில்லை. தாய்மையின் பெரும் சுழலுக்குள் ஒளிவு மறைவென்னும் துரும்புகள் சிக்கி மறைந்துவிட்டன. உலகை மறந்த அன்பு நிலை!

அடுத்திருந்த வீட்டுக்குள்ளிருந்து ஒரு அம்மாள் வந்தாள். தலை மயிரில் ஓடியிருந்த நரை உண்மையைக் கூறிக்கொண்டிருந்தது. ஆனால், உடுத்தியிருந்த துணியும் மணியும், மோஸ்தரும் நைலான் மனதை வெட்ட வெளிச்சமாக்கிக்கொண்டிருந்தன. தோள்மீது செல்லும் சேலைத் தலைப்புக்கூட மனத்தின் கட்டளைக்கிணங்க ஒடுங்கிச் சென்றுகொண்டிருந்தது.

வாசலில், கோலம் போடும் இடத்திற்கருகில், பால் கொடுத்துக்கொண்டிருந்த காட்சியைக் கண்டாள். திடுக்கிட்டாள். 'வெக்கக்கேடு! தள்ளி எங்கேயேனும் உட்காரக் கூடாதா? நடுத்தெருவிலே—'

'கேட்டைத் தாண்டிப் போனுக் கொன்னூடுவாங்க.'

'உனக்கு மானம், வெக்கம்-'

'பிள்ளேக்குப் பால் கொடுக்கிறதிலே வெக்கம், மானம் என்னுங்க ?'

'சுரணே இல்லாத பொணம்' என்று சொல்லிக் கொண்டே அம்மாள் வீட்டுக்குள்ளே போய்விட்டாள்...

* * *

அதே ரோடு. திருப்பத்தில் ஒரு பங்களா. குமாஸ்தா அடக்கமாக உள்ளே நுழைந்து முதலாளியின் அறைக்குள் சென்ருர். முதலாளியும் நாலேந்து கனவான்களும் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தனர். அதைக் கண்ட குமாஸ்தா தண்ணீர்ப் பாம்பைப்போல மறைய முயன்ருர்.

'சும்மா வா ஐயா' என்று முதலாளி சகோதரப் பண்பைக் காட்டுவதுபோல வருந்தி அழைத்தார்.

நெளிந்துகொண்டே குமாஸ்தா ஒரு நாற்காலியின் ஓரத்தில் வந்து உட்கார்ந்தார்.

முதலாளி என்ன ஜாடை காட்டினுரோ என்னவோ குமாஸ்தாவுக்குமுன் பக்ஷணங்கள் ஒரு இலே நிறையக் கொண்டுவந்து வைக்கப்பட்டன.

இலேயைத் தொடாமல் குமாஸ்தா சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தார்.

'சாப்பிடய்யா' என்ருர் முதலாளி.

'இப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன்' என்று குமாஸ்தா புளுகினுர்.

'பின்னே காபியேனும் சாப்பிடு' என்று உபசாரம் செய்தார் முதலாளி.

அடுத்த விநாடி காபி வந்து சேர்ந்தது. குமாஸ்தா அதைச் சாப்பிட்டுக்கொண்டிருந்த பொழுதே சமையற்காரன் இலேகளே எல்லாம் எடுத்துக்கொண்டு வந்தான்.

'அதையும் சேர்த்து எடுத்துப் போ' என்று முதலாளி குமாஸ்தாவின் இலையைக் குறிப்பிட்டார்.

சமையற்காரன் மற்ற இலைகளை எடுத்த கையோடு இந்த இலையையும் எடுக்க வந்தான். குமாஸ்தாவுக்கு தீவட்டிக் கொள்ளையில் பறிகொடுத்தது போல பகீரென்றது. பெரிய மனிதர்கள் என்றால் நல்லதை நினைக்காதவர்கள் என்று அவருக்குத் தோன்றிற்று. சமையற்காரன் அருகில் வந்ததும் இதை எடுக்காதே என்று குமாஸ்தா ஜாடை காட்டினார். தரித்திரத்தில் பழுத்த மற்றொரு பழம் தானே அவனும்! நெளிவாக பாக்கி இலைகளை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

குமாஸ்தா இலையைப் பொட்டலமாகக் கட்டி, சுருட்டி மறைத்து எடுத்துக்கொண்டு எழுந்திருந்தார்.

வந்த சமாசாரமென்னவென்று முதலாளியும் கேட்கவில்லை. குமாஸ்தாவும் சொல்லவில்லை. உண்மையில் குமாஸ்தாவின் நினைப்பெல்லாம் வீட்டில் அழுது தொல்லை கொடுக்கும் பையன்கள்மீதே சுழன்றுகொண்டிருந்தது.

போக உத்தரவு பெற்றுக்கொண்டு குமாஸ்தா நேரே வீட்டுக்கு வந்து பொட்டலத்தைப் பிரித்துப் பையன்களிடம் பங்கு போட்டுக் கொடுத்தார்.

'ஏது இவ்வளவு?' என்று கண்ணை அகல விரித்து அவர் மனைவி கேட்டாள்.

'கடையில் வாங்கிக்கொண்டு வந்தேன்' என்று கூசாமல் புளுகினார் குமாஸ்தா.

முதலாளி கனவான்களுடன் பேசிக்கொண்டிருந்தார். 'பார்த்தீங்களா, குமாஸ்தா புத்தியை! நீங்க எப்படி வேணும் இருந்து பாருங்க இந்தச் சின்னப்புத்தி குமாஸ்தாங்களை விட்டுப்போகாது' என்று புருவங்களை உயர்த்தினார்.

கனவான்கள் ஆமோதித்தனர்.